நல்லூர் இளை நூல்கம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

அறவழி
NONVIOLENCE

**நன்மை செய்வாய் புத்தாண்டே**

நரகசுரன் கொடியாட்சி தனையொடித்து
நன்மை செய்ய வந்துள்ள புத்தாண்டே!
பரபிரான் திருவருளை பங்கமின்றித் தந்துவிடு!
பாமரரும் பண்டிதரும் யாவருமே ஒன்றுக
தரவுகளை வழிப்படுத்தி தக்கநெறி காட்டிவிடு
தழைத்தோங்கும்கல்வியொடுநல்வளமும்
பிரமோதூத இரட்சகனே வாரி வழங்கிவிடு;
பஞ்சமின்றிஅறவழியில்வாழ்ந்திடுவோம்!

— இராஜி

அறம் 4 | மாத இதழ் | சித்திரை 1990 | விலை 3 00 | 32 வழி

# புகைபிடிக்கும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு இருதயநோய்!

## மருத்துவ ஆய்வில் கண்டுபிடிப்பு; கண்களிலும் பாதிப்பு ஏற்படுகிறது!

**புகை பிடிக்கும் பழக்கமுடைய பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு பிற்காலத்தில் இருதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக வைத்திய ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.**

அமெரிக்காவில் இருதயநோய் நிபுணர்கள் மாநாடு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இம் மாநாட்டிலே மேற்படி முடிவு தெரிவிக்கப்பட்டது.

இவ்வைத்திய அறிக்கையின் பிரகாரம்பெற்றோர்கள் தமது புகைப்பிடிக்கும் பழக்கத்தினால் பிள்ளைகளுக்கு ஏற்படும் தீமைகள் பற்றி நன்கு சிந்தித்து பார்க்க வேண்டும் என்று கேட்கப்படுகிறார்கள்.

### கண்களும் பாதிப்பு

இதே வேளை புகைப்பிடிக்கும் பழக்கத்தினால் கண்கள் பாதிக்கப்படுவதாகவும் மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

புகை பிடிப்பவர்களுக்கு வெண்படலம் விரைவாக ஏற்படுகின்றது.

அமெரிக்காவில் பால்டிமோரில் 838 பேர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் 518 பேர் சிகரெட் பிடிப்பவர்கள். இவர்களில் 27 சதவீதமானோர் வெண்படல நோயால் பீடிக்கப்பட்டவர்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

புகைக்கும் பழக்கம் கொண்டவர்கள் தமது பழக்கத்தை நிறுத்தினால் விழிகளில் வெண்படலம் படர்வதை தடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

## மில்க்வைற் அன்பளிப்பு

மில்க் வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா அறவழிப் பணிமனையிலுள்ள காந்தி நினைவரங்கிற்கு திருவள்ளுவரின் படம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

அறவழி பொது நூலகத்திற்கும் அவர் சிறந்த நூல்கள் பலவற்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

அன்பர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
அறவழிப் போராட்டக்
குழுவுடன் இணைந்து
புதிய சமுதாய
வெளியீட்டகம் தனது

**புத்தாண்டு வாழ்த்துக்களை**

தெரிவித்துக்
கொளகிறது.

நிர்வாகி

## அணு ஆயுத பரிசோதனைக்கு எதிராக சர்வதேச உண்ணாவிரதம்

உலகில் சுமார் பன்னிரண்டு நாடுகளில், நாற்பது இடங்களில் மேற்கொள்ளப் பட்டுவரும் அணு ஆயுத பரிசோதனை முயற்சிகளைச் சம்பந்தப்பட்ட நாடுகள் உடனடியாகக் கைவிடல் வேண்டும் எனக் கோரி சர்வதேசிய மட்டத்திலான உண்ணா விரதப் போராட்டங்கள் அண்மையில் பல நாடுகளில் நடாத்தப்பட்டன.

இப்போராட்டங்களின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றி அறவழி ரீதியில் தமது எதிர்ப்புக்களை அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்குக் காட்டியுள்ளனர்.

இவ்விதமான உண்ணாவிரதப் போராட்டங்கள் அமெ

(6ஆம் பக்கம் பார்க்க)



**மரங்களைப் பாதுகாப்போம்**
**ஏப்ரில் 22**

**EARTH DAY**
**APRIL 22**

## போரை ஊக்குவிக்கும் அரசுக்கு வரிப்பணம் செலுத்த மாட்டோம்

ஐரோப்பிய, வட அமெரிக்க ஸ்கண்டி நேவியன் நாடுகளில் வாழ்கின்ற அமைதிவழி, அறவழி இயக்க உறுப்பினர்கள் தத்தம் நாடுகளின் அரசுகளுக்கு தமது வரிப்பணங்களைச் செலுத்துவதில்லை என அமைதியான வழியில் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

அமைதியையும், சுபீட்ச நிலையையும் உலகில் ஏற்படுத்த வேண்டுமென்ற ஆவல் கொண்டுள்ள மக்களின் வரிப்பணங்களைத் திரட்டி மேற்கூறிய நாடுகளில் இருக்கின்ற அரசாங்கங்கள், உலகில் போரை ஊக்குவிக்கும் நோக்குடன் ஆயுதக் கொள்வனவுகளுக்கென பணத்தை இரகசியமாக வழங்கி வருவதைக் கண்டித்துள்ளார்.

இதன் காரணமாக, இந்த நாடுகளில் இருக்கின்ற அமைதி வழி, அறவழி இயக்க உறுப்பினர்கள, தமது தொலைபேசி வரி, தொலைக்காட்சிவரி. வருமானவரி போன்ற வரிகளை அரசுக்குச் செலுத்தாமல் போராடி வருகின்றனர்.

அரசுக்குரிய வரிப்பணத்தைச் செலுத்தத் தவறுவோர் மீது அரசுகள் நடவடிக்கைகள் எடுத்து, நீதி மன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்வது வழக்கமாகும்.

ஆயினும், இவ்வித குற்றச்சாட்டுகளில் ஈடுபடுத்தப்படுவோர், தாம் கொண்ட கொள்கையில் உறுதியாகவிருந்து, நீதி மன்றங்களில் கூட, தமது நாட்டு அரசு செய்கின்ற தவறான செயலைச் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

போரை ஊக்குவிக்கும் எவ்வித நடவடிக்கைகளிலும் அரசாங்கம் ஈடுபட மாட்டாது என அரசு உறுதியளிக்கும் பட்சத்தில், மட்டுமே, தமது வரிபபணத்தைச் செலுத்தத் தாம் தயாராகவிருப்பதாக இவ்வித போராட்டங்களில்

(6ஆம் பக்கம் பார்க்க)

**இலங்கையில் வெளியிடப்படும் ஒரேயொரு அறவழி இதழ்**

## என் பிரிய கண்மணிகளுக்கு

என்பிரிய கண்மணிகளுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக!

பிரமோதூத வருடம் மிகவும் நல்லபலன்களுடன் வருகிறான். நாம்பட்ட துயரங்கள் துன்பங்கள் மறைந்து விடுமென்றும் கல்வி – பொருளாதாரம் சிறந்தோங்குமென்றும் நாட்டில் சமாதானம் ஒற்றுமை புரிந்துணர்வு வளருமென்றும் தன தானியங்கள் பயிர்வளங்கள் செழிக்குமென்றும் வருடபலன்கள் கூறுகின்றன.

தம்பி தங்கைகளே!

இப்புதிய புத்தாண்டில் நாம் சில புதிய சங்கற்பங்களை எடுத்துக்கொள்ள வேண்டும்., கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். பிரார்த்தனையில் சிரத்தை கொள்ளவேண்டும். ஓய்வு நேரங்களில் சமூகப் பணிகள் வாசித்தல், தொழில் முன்னிலைப் பயிற்சிகளை, மேற்கொள்ள வேண்டும். இப்படிச் சில கொள்கைகளை மனதிலே உறுதியாக்கிக் கொண்டு இறைவனுடைய ஆசிவேண்டி நல்லொழுக்க சீலர்களாக வளர வேண்டுமென்பதே எங்கள் உள்ளம் நிறைந்த விருப்பமாகும்.

## சிறுவர் உச்சி மாநாடு

இரண்டாவது. சர்வதேசச் சிறுவர்களின் உச்சி மாநாடு அண்மையில் நியூயோர்க்கில் நடைபெற்றது. இம் மாநாட்டில் சுமார் எண்பது நாடுகளைச் சேர்ந்த ஏழு வயதிற்கும் பதினைந்து வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

நாடுகளுக்கிடையே நிலவி வருகின்ற அச்சங்களையும், நம்பிக்கையீனங்களையும் எவ்விதம் குறைத்துக் கொள்ளலாம் எனவும், நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள யுத்தங்கள் காரணமாக பெருந்தொகையான அளவு பணத்தினை செலவிடுவதிலும் பார்க்க அவற்றினை உணவு, வீடமைப்பு, மருந்து, பாடசாலை, ஆரோக்கியமான சூழல் போன்றவற்றின் அபிவிருத்திக்குச் செலவிடுவது பயனுள்ளதாகவிருக்கும் எனவும் சிறுவர்களின் உச்சி மாநாடு தீர்மானித்துள்ளது.

இம்மாநாட்டின்போது அமெரிக்க, சோவியத் ரஷ்ய நாடுகளில் இருந்து பங்கேற்ற சிறுவர்கள் மிக ஆர்வத்துடனும், அன்புடனும் பங்குபற்றி உரையாடியமை எல்லோரது கவனத்தையும் ஈர்ந்திருந்ததாக மாநாட்டு அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.




### இனிய புத்தாண்டு

புத்தாண்டு... புத்தாண்டு
இனிய தமிழ் புத்தாண்டு.
புத்தாடை நாம் அணிய
புலரும் ஒரு ஆண்டு.

அம்மாவும், அப்பாவும்
அனைவருமே இணைந்து
அன்புமழை பொழிந்து
அக மகிழும் ஆண்டு.

— செல்வி டயானா வீரசிங்கம்

## பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க

ஐந்தாம் வகுப்பு மாணவியான லதாவின் அக்காளுக்கு திருமண விழா இனிது நடந்தேறியது. அவளின் திருமண விழாவிலே பெரியவர் ஒருவர் வந்து "அம்மா நீவீர் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்தினார்.

அருகில் கேட்டுக் கொண்டிருந்த சில இளவயது நங்கைகள் பெரிதாகச் சிரித்தார்கள். சிறுமியான லதாவுக்கு இது கேலிச்சிரிப்பாகத் தெரிந்தது. அவள் தனது குட்டி அண்ணாவிடம் அண்ணா! "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்று நமது பெரியவர் அக்காவை வாழ்த்துகிற நேரம் விஜிபக்கா, சுமதியக்கா, கேதாக்கா எல்லோரும் சிரித்தார்களே! ஏனண்ணா .?

"அதையேன் உனக்கு ? அது உனக்குத்தெரியக்கூடாது. பெரியவங்களுக்குத்தான் அது புரியும்" என்று அவனும் கூறி மழுப்பி விட்டான். லதா ஒரு விவேகமான சிறுமி. சின்னவயதிருந்தே எதையும் சிந்தித்தல்– தெளிதல் – ஆகிய நற்குணங்களைப் பெற்றிருந்தாள். அதுபோலவே இதனையும் கேட்டுத் தெளிவு பெறாமல் அவளால் இருக்கமுடியவில்லை.

அடுத்தவாரம் பாடசாலையில் தமிழ் வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. லதா எழுந்து தமிழ் ஆசிரியையை நோக்கி' ரீச்சர்நான்ஒரு கேள்வி கேட்கிறேன். கோபப்படாமல் பதில் கூறுவீர்களா ..? ஏன் என்றால் நான்கேட்கிற நேரம் எல்லோரும் உனக்குச் சொல்லக்கூடாது என்று மழுப்புறாங்க, அதுதான் என்றாள் "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்றால் என்ன? ரீச்சர் சிரித்துவிட்டு லதாவை அன்புடன் தடவிக் கொடுத்து கெட்டிக்காரி! இப்படியான கேள்விகள் கேட்கும் மாணவர்களைத்தான் எனக்குப் பிடிக்கும். அறிவு அறிந்து கொள்ளவேதான்! உனக்கு அவர்கள் விடைகூறாமல் விட்டதிற்கு காரணம்; அவர்கள் அந்தவாழ்த்தைப் பிழையாக விளங்கிக் கொண்டமைதான்! ஆம்! "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும்" என்ற விடயத்தின் பூரண தெளிவான விளக்கமின்மையே!

லதா மட்டுமல்ல; இதோ அனைவரும் குறித்துக் கொள்ளுங்கள். பதினாறு பேறுகளின் விளக்கம் புகழ், கல்வி, மனத்திண்மை, வெற்றி, மக்கட்பேறு, துணிவு, செல்வம் தானியங்கள், சுகம் நல்லனுபோகம், அறிவாகிய ஞானம், அழகு, பெருமை, அறமனமுடைய குடிப்பிறப்பு, நோயின்மை, நீண்ட ஆயுள்.

இவை இலகுவாக உங்கள் மனதில் பதிய ஒரு பாடலும் உள்ளது. இதைப் பாடமாக்கி இப்போதே வைத்துக்கொண்டீர்களானால் எவரையும் தெளிவு கேட்கத் தேவையில்லை. மடக்கியே விட்டுவிடுவீர்கள்.

" துதிவாணி வீரம் விசயம்
தானம் துணிவுதன/ மதி
தானியம் சௌபாக்கியம்
போகம், அறிவு அழகு/ புதி
தாம் பெருமை அறம் குலம்
நோவகல்பூண்வயது/பதிறுனா
பேறும் தருவாய் மதுரைப்
பராபரனே.

கவிஞர் காளமேகப் புலவரின் இவ்வாழ்த்து என்றும் நிலைக்க வேண்டுகிறோம்.

— இராஜியக்கா —

# இதயங்கள் பேசுகின்றன

### உங்கள் பணி வாழ்க!

உங்கள் பணி மிக அருமையும் நேர்த்தியும், காலத்தால் அதி அத்தியாவசிய மானதுமாகும்.

மானுட நேயம் பற்றிய தலையங்கம் வரவேற்கத்தக்கது. இன்று "மானுடநேயம்" — பற்றி வாய்கிழிய, மேடை அதிர பேசுகிறவர்கள் நிறைய. ஆனுல் நிதர்சன வாழ்க்கையில் தான் அதன் சுவட்டைக் கூட காணமுடியவில்லை.

மனிதனை மனிதன் சுரண்டும் அவலமும், கழுத்தறுப்பும், அண்டிக் கெடுத்தலும், அகோர சுய நலமும் சமூகத்தில் புரை போடிப் போன புற்று நோய்களாகி விட்டன.

மதம், கடவுள் வழிபாடு, கலை, இலக்கியம், சமூக அபிவிருத்தி அனைத்துமே சப்பட்டமான, அர்த்தமற்ற வர்த்தகங்களாகி விட்டதால் மானுடநேயமும் அற்பமாகி விட்ட அவல நிலையில் மக்களின் மனதில் பண்புணர்வை, இங்கிதத்தை, பிறரின் நலனை பேணும் சுபாவத்தை வளர்க்க 'அறவழி' இதழ் நிறைய உதவ முடியும் உங்கள் பணி வாழ்க! வளர்க!!

— யோகா பாலச்சந்திரன்
ஸ்ரீலங்கா
குடும்பத்திட்ட சங்கம்
கொழும்பு — 7

### வாரம் ஒன்று வரவேண்டும்

நல்ல தரமான கருத்துக்களை அள்ளி வழங்கும் 'அறவழி' மாதமொன்றல்ல வாரம் ஒன்றாவது வரவேண்டும்

திவ்விய கனகபாலன்
நுவரெலியா

### கலைப் பொக்கிஷம்

இலங்கையில் வெளியிடப்படும் ஒரேயொரு அறவழி இதழ் என்ற அடிக்குறிப்புடன் வெளிவரும் அறவழி நல்ல கருத்துக்களையும், தகவல்களையும் தாங்கி வருகிறது.

ஒவ்வொரு மாதப் பத்திரிகையும் சேர்த்து வைத்து பாதுகாக்க வேண்டிய கலைப் பொக்கிஷம்.

குகதாஸ்
பரந்தன்

### ஆழமான ஆசிரியர் கருத்து

ஆசிரியர் கருத்துரை மிக ஆழமானது – அத்தோடு ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் பிரசுரமாகும் பழமொழிகளும் பல கதைகள் பேசுகின்றன.

சிறுவர் பகுதிக்கான விடயங்கள் போதாமலுள்ளது. முயன்றால் இன்னும் இதமாகச் செய்யலாமே–

சி. அகிலாண்டேஸ்வரி
அரியாலை

### பிரிண்ட் சரியில்லை

கடந்த பங்குனி அறவழி பத்திரிகை படித்தேன். பிரிண்ட்' சிறப்பாக இல்லாதது பெரும் குறைபாடாக உள்ளது.

அறம் சார்ந்த கதைகள், கட்டுரைகள், சிந்தனைகள் போதாமலுள்ளது.

பிருந்தாவன்
விசுவமடு

ஆசிரியருக்கு!

புதிய சமுதாய வெளியீட்டகத்தின் மாதாந்த வெளியீடான அறவழிப் பத்திரிகை பார்வையிட்டேன். இலங்கையிலே முதன் முதலாக அறவழி என்ற இதழை தங்களின் வெளியீட்டின் மூலமே அறிந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தமையையிட்டு மகிழ்கின்றேன். தங்களின் அறவழிச் சேவை என்றென்றும் மலர வாழ்த்துகின்றேன்.

செல்வி மீன்ஷாய் – பேகம்
கொழும்பு - 2

அறவழிப் பத்திரிகையில் தற்போது ஏற்படும் அமைதி நிலைபற்றி வாசித்தேன். இந்த அமைதி நிலைக்காக தங்களின் பிரார்த்தனைகள் நல்ல முடிவை ஏற்படுத்தியுள்ளன. பத்திரிகையை வாரத்திற்கு ஒன்று வெளியிட்டால் என்ன?

செல்வி அலெச்ஸியா றஞ்சினி
கொழும்புத்துறை

அறவழி வெளியீட்டாளருக்கு!

உங்கள் சேவை நாட்டுக்கு தேவை. சென்றமாத ஆசிரியரின் அறநோக்கு "மனித நேயம்" மிகவும் என்னை வியக்கவைத்தன. மனித நேயம் என்றால் என்ன ? அது எங்கே விற்கப்படுகிறது போன்ற விடயங்களை அறியக் கூடியதாக இருந்தன.

ஆசிரியருக்கு என் வாழ்த்துக்கள்.

வினிபிரட்
கொழும்புத்துறை

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. வீ. எஸ். துரைராசா அண்ணர் அவர்கள் அமெரிக்கா சென்ற செய்தி எம்மை வியக்க வைத்தது.

சமூக சேவைக்கு இலக்கணமாக வழிகாட்டிய அண்ணருக்கு, நாமும் இணைந்து வெற்றியடைய வாழ்த்தி வழி அனுப்புகின்றோம்.

உரிமையாளர்
சியாம் லொஜ்
குணசிங்கபுரம்
கொழும்பு

### மகளிர் செய்திகள் வேண்டும்

அறவழிப் பத்திரிகை வாசகர்களில் நானும் ஒருத்தி என்று கூறுவதில் பெருமையடைகிறேன். அறவழியில் மழலைப் பூக்கள்" சிறுவர்களை மகிழ்விப்பது போன்று மகளிர்களையும் மகிழ்விக்க மகளிருக்கான செய்திகளையும் வெளியிட வேண்டுமென்று விரும்புகினறேன். தவிர அறநோக்கை வலுப்படுத்தும் சிறுகதைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பீர்களென நம்புகிறேன்.

செல்வி. கு விஜயநிர்மலா
பொலிஸ் நிலைய வீதி
சாவகச்சேரி

★ நல்லது போனுல் தெரியும் கெட்டது வந்தால் தெரியும் ★

# அறவழிச் செய்திகள்

## மக்களிடையே நல்ல மாற்றங்களை சனசமூக நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும்.

"எங்களுடைய கிராமங்களிலே சந்திக்குச் சந்தி சனசமூக நிலையங்கள் இருந்தாலும் அவைகள் செயல் படுகின்றனவா என்றால் அது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. இந்த சனசமூக நிலையங்கள் யாவும் சிறப்பாக இயங்கினால் ஒரு நல்ல சமுதாயத்தைக் கட்டி யெழுப்ப முடியும்" இவ்வாறு கைதடி கலைவாணி வித்தியா சாலையில் அமைக்கப்பட்ட அறவழி கிராமிய நூலக ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு பேசிய அறவழி போராட்ட குழுச் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திரு. ப. செல்லத்துரை தலைமையில் நடை பெற்ற இவ் விழாவில் திருவாளர்கள் வி. சு. துரைராசா ச. நடேசபிள்ளை உட்படப்பலர் கருத்துரை வழங்கினர்கள்.

சனசமூக நிலையங்கள் அரச நன்கொடை பெறும் நிறுவனமாக இயங்காமல் மக்கள் மத்தில் ஆளமாக வேரூன்றினால் மக்களிடையே நல்ல சிந்தனைகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்தலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைதடி அறவழி கிராமிய நூலகத்தை அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் திரு. விசு துரைராசா ஆரம்பித்து வைத்தார்,

### மூன்று கிராமங்களில் நூலகம்

மிருசுவில் மறவன்புலோ, கைதடி நுணாவில் ஆகியமூன்று கிராமங்களில் அறவழி கிராமிய நூலகங்கள் ஏப்பிரல் மாதம் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை செயலாளர் திரு. க ஜீவகதாஸ் மேற் கொண்டுள்ளார்.

### நடேசபிள்ளை நலம்பெற வேண்டும்

அறவழி நூலக சபைத் தலைவர் திரு. ச. நடேசபிள்ளை அவர்கள் கைதடியில் கடந்த வாரம் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்துள்ளார்.

திரு. ச. நடேசபிள்ளை இக் காயத்திலிருந்து சுகம் பெறுவதற்கு ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்

### கண்காட்சி

அறவழி நூலக கண்காட்சி ஏப்பிரல் மாதம் 9-ம் திகதி திங்கட் கிழமை மட்டுவில் பன்றிதலைச்சி அம்மன் கோயிலடியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி உதவிஅரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை இக் கண் காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

### நூலகம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

ஆலயம் இல்லா இடத்தில் இப்போது குடியிருக்கலாம், ஆனால் நூலகம் இல்லா இடத்தில தான் குடியிருக்க முடியாது என்று பிட்டியெல்லை அறவழி மகளிர் குழுத் தலைவி திருமதி வள்ளியம்மை முருகையா தெரிவித்தார்.

பிட்டியெல்லை கிராமத்தில் அறவழி கிராமிய நூலக ஆரம்ப விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அறவழிப் போராட்டக்குழுச் செயலாளர் திரு.க. ஜீவகதாஸ் இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நூலகத்தை ஆரம்பித்துவைத்தார்.

திருமதி வள்ளியம்மை முருகையா மேலும் அங்கு பேசுகையில் "நூலகம் இல்லா ஊரில் இருந்தால் நுண்ணறிவு பெறமுடியாது. வாசிப்பதால் தான் மனிதன் பூரணமடைகிறான். எனவே அறவழி நூலகத்திலுள்ள அரும் பெரும் நூல்களை படித்துப் பயன் பெறவேண்டியது அனைவரினதும் கடமையாகும்" என்று தெரிவித்தார்.

என்.கே. துரைசிங்கம், காரநகர் அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் எஸ். கிருஷ்ணன் உட்பட பலர் ஆசியுரை வழங்கினார்கள்.

அறவழி சிறுவர் குழு உறுப்பினர் துஷ்யந்தன் சிறப்புரை வழங்கினார்.

## நாற்காலி உத்தியோக நோயாளிகள்

படுக்கைகளில் படுத்திருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளை ஆஸ்பத்திரிகளில் காணலாம். ஆனால் நாற்காலி உத்தியோக நோயாளிகளை அரச அலுவலகங்களிலே காணலாம். ஆம்! அரச அலுவலகங்களில் பணிசெய்யும், பெரும்பாலானவர்கள் நாற்காலி உத்தியோக நோயாளிகள் போன்றே காணப்படுகின்றனர்.

பொது மக்களுக்குச் சேவை செய்வதற்காக பொது மக்களுக்காக பொது மக்களின் வரிப்பணத்தில் நடாத்தப்படுபவைதான் அரச அலுவலகங்கள்.

பொது மக்களின் வரிப்பணத்தில் தான் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம்,மற்றும் பிற படிகள் வழங்கப்படுவதுண்டு ஆனால் அரச அலுவலங்களில் உண்மையாக நடைபெறுவதென்ன? அங்கே பொது மக்கள் குற்றவாளிகளைப் போலவே நடாத்தப்படுகின்றனர். படிப்பறிவில்லாத பாமர மக்கள்படும் பாடோ அதிகம்.

பொதுமக்களின் அலுவல்கள் காலம் கடத்தப்படுகின்றன. அத்துடன் வீணான இழுத்தடிப்பு நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன.

அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்களில் பெரும்பான்மையானோர் தமது கடமைகளை ஒரு பொழுதுபோக்குப் போலவும், மாதா மாதம் சம்பளம் பெறுவதற்கு ஒரு வழியாகவே கருதிவருகின்றனர் என்பது நடைமுறை உண்மையாகும்.

அரச அலுவலகங்களில் உத்தியோகம் பார்ப்போர், தாம் பொது மக்களின்சேவையாளர்கள் என்பதை மனதில் இருத்திச் செயல்பட முன்வந்தால் தான் அரச அலுவலகங்கள்திறம்பட இயங்க முடியும்.

வெளிநாடுகளில் இருக்கின்ற அரச அலுவலகங்களுக்கு மக்கள் தம்அலுவல்கள் காரணமாகச் சென்றால் அங்கே டணிசெய்கின்ற உத்தியோகத்தர்கள், பொது மக்களை அன்புடன் வரவேற்று, குசலம் விசாரித்து இருக்கை கொடுத்து, மனிதாபிமானமாக நோக்கில், பொது மக்களின் பிரச்சனைகளை அறிந்து, புரிந்து உதவி செய்து மக்களை மகிழ்வுடன் அனுப்பிவைப்பார்கள்.

ஆனால் இங்கே இருக்கும் அரச அலுவலர்களோ பொது மக்கள் முன் சீறிச் சினந்து, அவர்களுடன் விரோத மனப் பான்மையுடன் பேசி, பொது மக்களுக்குச் செய்யப்படவேண்டிய கடமைகளை அல்லது சேவைகளை உதாசீனம் செய்து அனுப்பி விடுவார்கள்.

எமது பிரதேசம் முன்னேற வேண்டுமானால் அரச உத்தியோகத்தர்கள் தம்மை உணர்ந்து, பொது மக்களுக்காகிய சேவைகளை விசுவாச உணர்வுடன் ஆற்ற முன்வரல் வேண்டும். எனவே அரச அலுவலகங்கள், நாற்காலி உத்தியோக நோயாளிகளின் இருப்பிடங்களாக இருக்கும் நிலை மாற வேண்டும்

எமது மக்களுக்காகவே நாம் சேவையாற்றுகின்றோம் என்னும் அன்புணர்வுடன் ஒவ்வொரு அரச ஊழியர்களும் செயற்பட்டால் நிச்சயமாகப் பல உயர்வுகள் தேடிவரும்.

## வைக்கம் சத்தியாக்கிரகம்

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வைக்கம் ஒரு சிறு கிராமமாகும். இக் கிராமத்தில் சமூக நீதியினை நிலை நாட்டுவதற்காக தன்னுடைய தொண்டர்கள் மூலம் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் நடத்தினார்.

இக் கிராமத்தில் பிராமணர்கள் குடியிருப்புக்கும். கோயிலுக்கும் பக்கமாக ஒரு பாதை சென்றது.

தீண்டாதவர்கள் அப்பாதையில் நடக்கக் கூடாது. இப் பழக்கத்தை நீக்கச் சத்தியாக்கிரகம் நடந்தது. காந்தியடிகள் இப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளவில்லை.

ஆனால் அவரிடமிருந்து கடிதங்களும், தந்திகளும் தொண்டர்களுக்குக் கிடைத்தன. பின்னர் ஒரு முறை அவரே அக் கிராமத்தை நேரடியாகப் பார்வையிட்டார்.

தலைவர்கள் தீண்டாதாரை அழைத்துக் கொண்டு அப் பாதை வழியாகச் சென்றனர். பிராமணர்களிடம் அடிபட்டனர். ஒருவர் பலத்த காயம் அடைந்தார்.

ஆனால் சத்தியாக்கிரகிகள் எக் கட்டத்திலும் வன்முறையில் இறங்கவில்லை. பிராமணர்கள் பொலிசாரைக் கொண்டு இவர்களைக் கைது செய்தனர் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். தொண்டர்கள் பல பாகங்களிலிருந்தும் வந்து குவிந்தனர். இதனால் அரசாங்கம் தொண்டர்களை கைது செய்வதை நிறுத்தியது

### ஜீவகன்

ஆனால் அந்தப் பாதையை அடைத்துப் போலிஸார் காவல் செய்தனர் காந்தியடிகள் இடமிருந்து தகவல் பெற்றுச் சத்தியக்கிரகிகள் போலிஸ் காவலுக்கு முன்னால் பிரார்த்தனை நிலையில் நின்றனர்.

ஆறு மணிக்கு ஒரு முறை தொண்டர்கள் மாற்றப்பட்டனர். அங்கேயே ஒரு குடிசை போடப்பட்டது. அதிகவேலை இல்லாத போது நூற்பு வேள்வி நிகழ்ந்தது. வன்முறை முழுவதும் தவிர்க்கப் பெற்றது. போராட்டம் பல மாதங்கட்குத் தொடர்ந்து நடந்தது.

மழைக் காலம் வந்தது. பாதையில் வெள்ளம் நிரம்பி வழிந்தது. போலிஸர் படகுகளில் அமர்ந்து காவல் செய்தனர். அப்போதும் சத்தியாக்கிரகிகள் தளரவில்லை.கழுத்து அளவு தண்ணீரிலும் தொண்டர்கள் நின்று கொண்டு போராட்டம் நடாத்தினர்; மூன்று மணிக்கு ஒரு தடவை தொண்டர்கள் மாற்றப்பட்டனர்.

தொண்டர்களின் பிரார்த்தனைகளும், துன்பங்களும் பிராமணர்களை உருக்கியது. இனிமேல் அவர்கள் துன்பங்களை நாங்கள் பொறுத்திருக்க முடியாது. தீண்டாதாரை வரவேற்கத் தயார் என்று பிராமணர்கள் அறிவித்தனர்.

இவ்வாறு ஒருவருடம் நான்கு மாதப் போராட்டத்திற்குப் பின்னர், பாதை அனைவருக்கும் திறந்து விடப்பட்டது. சமூக அநீதியும் ஒழிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள இது போன்ற பல தடைகளை நீக்குவதற்கு இச் சத்தியாக்கிரகம் தோற்றுவாயாக அமைந்தது.

## அறிவழியே ஒருவழி

"அகன்ற வழியால் உள் நுழைய முயற்சிக்காதீர்கள், ஏனெனில் அங்கு கேடு சூழ்ந்திருக்கும். ஒடுங்கிய வழியால் உட் செல்ல முயலுங்கள அது கஷ்டமானதாக இருந்தாலும் நன்மை பயப்பதாக இருக்கும்" என்றார் யேசு.

ஆம், அகன்ற, அகலமான பாதை எப்பொழுதும் அழகாகவும்,ஆடம்பரமானதாகவும், கவர்ச்சியுள்ள தாகவும் தான் இருக்கும். ஏனெனில பலர் அவ் வழியால் செல்லுவார்கள். செல்லுவதற்கு சுகமானதும் இதமானதுமாயிருக்கும்.

ஆனால் நெருக்கமான பாதையோ சரடு முரடானதாகவும் பலர் ஒன்று சேர்ந்து செல்ல இயலாமல் தனிவழிப் பாதையாயும், பயங்கரமானதாகவும் இருக்கும். ஆனல் அங்கு கள்ளம், கபடம், சூது, சோடனைகள் இருக்காது.

அதுவே அறவழியாகவும் இன்ப வழியாகவும், ஆண்டவனைத் தரிசிக்கும் வழியாகவும் இருக்கும்.

புலரும் புத்தாண்டிலும், மலரும் யேசுவின் உயிர்ப்பு விழாவிலும் நோற்ற நோன்பு பயனடையும் "றம்சான்" விழாவிலும் அறவழியையே ஒரு வழியாயிருத்தி வாழ முற்படுவோம்.

## சுவிஸிலுள்ள வளர்மதி உறுப்பினர்களின் முன்மாதிரித் திட்டம்

சுவிஸிலுள்ள மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய உறுப்பினர்கள் கடந்த கால வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தமது நிலைய எல்லைக்குட்பட்ட மக்களுக்கு புனர் வாழ்வளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இத்திட்டத்தின் முதற்படியாக கடந்தமாதம் நான்கு குடும்பங்களுக்கு மொத்தம் அறுபதினாயிரம் ரூபா வரையில் நிதிஉதவி வழங்கியுள்ளார்கள்.

மேலும் உதவிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

★ பணமில்லாவிட்டால் உன்னை யாருக்குமே தெரியாது ★

## சிறுகதை

தன்னை மறந்த நிலையில் சாந்தன் அமர்ந்திருந்தான். அவன் திட்டம் எல்லாம் தவிடு பொடியாகி போன நிலையில்– எல்லாமே சூனியமாகி விட்ட நிலையில் சமுதாயத்தின் ஏளனப் பார்வை அவனைப் பார்க்கும் வீச்சில் கூனிக் குறுகி, இருந்தான். யார் செய்த தவறினால் இது நடந்தது? ..... அவனே அவனுக்கு வெட்டிய குழி.

# பாதை மாற்றும் போதை —

சாந்தன் என்னதான் இருந்தாலும் தன்னை உணராதவனில்லை. எதிர்கால சுபிட்சத்தை மனதில் சுமந்து, பெற்றோர் உற்றோர் புகழ வாழ நினைத்தவன். அவனது முன்னேற்றம் தடைபடக்காரணம் வேறு யாருமில்லை, அவனே அவனுக்கு காரணமாகி நின்றான்.

மூத்தவன் சாந்தன். அடுத்தவள் கௌரி. அதற்கு கீழ் சிவபாலன், சிவராணி என இருவர். நால்வருக்கும் தந்தையோ! தாயோ எக்குறையும் வைக்கவில்லை. நல்ல உடுப்புகளைக்கூட அவர்கள் நாடுவதில்லை — விலை குறைந்த சாரம், துண்டு, கைத்தறிபுடவை என காலத்தை அவர்கள் போக்கினர்.

சில ஆண்டுகட்கு முன் அவனது கல்வி தங்குதடையின்றி வலிமைபெற்றது. அவனது தந்தை சுப்பிரமணியம் சிறு தோட்டச் செய்கைக்காரன். தாயாரும் தந்தைக்குதவியாக தோட்டத்திலும் வீட்டிலும் மாறி மாறி வேலைசெய்து அக்குடும்பம் முன்னேற பாடுபட்டுவருகிறாள். தந்தையும் தாயும் தங்கள் பிள்ளைகள் கல்விக்கும், உடுப்புக்கும், உணவிற்கும் குறைவைக்காது — மிச்சப்படுத்தி வண்டிலும், மாடும் அவிழ்த்தனர் என்றால் அதன் திறமை தானென்ன.

தந்தையின் தோட்டக் காணியருகே கள்ளுக் கொட்டில் — ஒரு நாளென்றாலும் அவர் ஒரு போத்தலைக் கூட தொட்டதில்லை - யாரும் கேட்டால் "ஒரு போத்தல் ஆறு ரூபாய் என்றால்— மாதம் அதற்கே நூற்றைம்பது போகும்" அது இருந்தால் பிள்ளைகட்கு டியூசன் கிளாஸிற்கு கொடுக்கலாம்" என்பார். அவர் தன் உடலுழைப்பின் அயர்ச்சியைப் போக்கக் கூட அதை தொடுவதில்லை. புகையிலை - பீடி, சுருட்டு - ஒன்றுமில்லை. சில வேளை வெற்றிலை போடுவதுடன்சரி.

இப்படிப்பட்ட தந்தை மனதில் பொங்கிய ஆவல் தன் மகன் படித்து ஓர் நல்லவேலை எடுக்க, அதனை கண்குளிர பார்க்க வேண்டுமென்பதே.

ஒருநாள் பெரும் மகிழ்ச்சியோடு வந்தார். விதானையார் வீட்டடிக்குப் போனவர் முகத்தில் பெருமிதத்துடன் வந்தார்.

"என்னப்பா நடந்தது" அம்மா கேட்டாள்.

"நான் போனதும் - ஆக்கள் கனக்க நிண்டும் கூட அவர் அதான் எங்கட விதானையார் 'என்னப்பா சுப்பிரமணியம் சுகமே - மகன் சாந்தன் நல்லா எக்ஸாம் செய்திருக்கிறானாம் —வலு சந்தோசம் — கஸ்டப்பட்டு படிக்க வைச்சுப் போடும் — நாளை ஒரு ஏ. ஜி. ஏ யாக கூட வரலாம் — கெட்டிக்காரன் — என்னாலியன்ற உதவி செய்றன் ........ என்ன? " என்றார் — எல்லாரும் என்னை மரியாதையோடு பார்த்தனர். எனக்கு எப்படி இருந்திருக்கும்"

அந்த ஏழைத் தந்தையின் இன்பப் பூரிப்பில் தாயும் சேர்ந்து கொண்டாள்.

சாந்தன் ஓ. எல்., ஏ. எல் எல்லாம் மிக திறமைகளுடன் சித்தித்து பல்கலைக்கழக மாணவனாகி முதலாமாண்டு வியத்தகு முறையில் சித்தி பெற்று இரண்டாமாண்டு காலடி வைத்தான்.

சீலன் பணக்காரன். அவனது அண்ணன் சீலனை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு காசு அனுப்பினன். அவன் இதனால் கொழும்பிற்கு அடிக்கடிபோய் வருவான்.

அங்கு அவனுக்கு முத்து பழக்கமானன். முத்து தேனீர் கடையில் வேலை செய்பவன். இருவரின் பழக்கமும் நெருங்க போதைப் பொருளைச் சீலன் யாழ்ப்பாணம் கொண்டு வரத் துவங்கினான். தனது நண்பர்கள் பலரை இதனால் அடிமையாக்கி — அவர்களை நடைபிணமாக்கி விட்டான். கடந்த வாரம் போதை வெறியில் பாதையில் போக வாகனமேறி சீலன் மறைந்தான். இப்போ மருந்து தர ஆளின்றி விசர் பிடித்து திரிந்த சாந்தன் ஒரு வாரமான பின் சுயநினைவுடன் தன்னைத் தான் உணர்ந்தான். இனிஎன்ன செய்வது?

### நி. இராஜம் புஷ்பவனம்

அப்போது படிக்க வசதிக்காக யாழ்ப்பாணடவுனிலேயே ஓர் அறை எடுத்து தங்கினான். அந்த அறையில் அவனது நண்பன் சீலன் தங்கியபோது தான் சாந்தனுக்கு சனியே பிடித்தது — தூக்கமின்றி சீர் குலைந்திருந்த சீலன் — இறுதியில் — சாந்தனுக்கும் தனது பழக்கத்தை ஏற்படுத்தி விட்டான் .. மெல்ல மெல்ல போதைக்கு அடிமையானன் சாந்தன், எப்போதும் போதை என்ற பேதைமடியில் தூங்கத் துவங்கியதால் தன்னை தன் சூழலை கண்ணெணபோற்றும் கல்வியைப், மானம், மரியாதையை அனைத்தும் இழந்தான். இறுதியில் பரீட்சைக்கும் போகாது - லட்சியத்தைக் கொன்று விட்டான்.

அனைவரையும் வாழ்விக்க எண்ணியவன் - தன்னை வாழ்விக்கக் கூடவகையற்று றோட்டில் தலைகுனிந்து நின்றான்.

இவ்வளவு விரைவில் புத்தி தெளிந்தது இல்லாவிடில் தன் வாழ்வு அழிந்தொழிந்து ..... ஆறுமாதத்தில் அவனுடைய உருகிய உடலும் குழிவிழுந்த கண்களும் பேய் பிடித்தமாதிரி... அவன்தன் சஞ்சலம் தீருமட்டும் அழுதான்.

இழந்த வாழ்வை செப்பனிட உறுதி பூண்டான். குளித்து முழுகி பெருமாள் கோவிலின் படியில் நின்றான். அநுமாரே என்னை ஆள்... என சஞ்சீவி நாதனை வேண்டி — மனவலிமைக்காக திடனுறுதி பெற்றான் — போதை விட்டது — ஆம் பாதை மாறவைக்கும் போதை தெளிய மனதை— மானசீகமாக நேசிக்கும் ஓர் இறைசக்தியை வேண்டுதல் செய்ய மனம் வேறு நிலையில் அதாவது போதை நாடாது மனசத்தி பெற இறைசத்தி உதவும் என தெளிந்தான்.

# புல் வளர்ப்பதால் மண் அரிப்பைத் தடுக்கலாம்

இலங்கையில் பெரும் பிரச்சினைகளில் மண் அரிப்பும் ஒன்று ஆண்டுதோறும்; லட்சக் கணக்கான தொன்கள் மண் மழை நீரினுல் கழுவப்பட்டு ஆறுகள் வழியாகக் கடலுக்கு அள்ளிச் செல்லப் படுகின்றது.

மண், ஒரு நாட்டின் பெரும் சொத்துக்களில ஒன்று. அதை இழப்பின் நாடே வறுமையடைந்து விடும். பயிர்கள் வளர்வதற்கு மண் தேவை. அதுவும் செழிப்பான மண் தேவை. மண்ணை இழப்பின் பயிர்கள் வளரா. பயிர்கள் வளராவிடின் மனிதன் தன் உணவுககு எங்கே போவது? விறகையும் மரங்களையும் எப்படிப் பெறுவது?

கிணறு வெட்டியவர்களுக்குத் தெரியும் ஒரு சில அடிகள் ஆழத்திற்கு மட்டுமே மண் உண்டு என்பது. அதற்குக் கீழ் கற்பாறை.

பூமியின் மேற்பரப்பிலுள்ள மெல்லிய மண்படலம் எப்படித் தோன்றியது! நாம் வாழும் பூமி 400 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. தோன்றிய போது அது ஓரே தீப்பிளம்பாக இருந்தது. பின்பு படிப்படியாகக் குளிர்ந்து மேற்பரப்பு உருவாகியது. அப்பொழுது அதை ஒரு பாறை தீப்பாறை என்று புவிச்சரிதவியலார் அழைத்தனர். காலப்போக்கில் அப்பாறை சூரிய வெப்பத்தில் வெடித்து. காற்றாலும் மழையாலும அரிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு மண்ணாக மாறியது.

ஆரம்பத்தில் அது ஆற்று மணல் போலப் பருக்கனாகத் தான் இருந்திருக்கும். அதன் பின் புல் முளைத்து. மரம் வளர்ந்து, இலைகள். சருகுகள் உதிர்ந்து. மண் புழுக்களும் கறையானும் மற்றும் பூச்சி புழுக்களும்வாழ்ந்து மண் பதம் பெற்றது: பசளைத்தன்மை பெற்றது.

ஒவ்வோர் ஆண்டிலும் புதிதாக உருவாகும் மண்ணிலும் பார்க்க பலமடங்கு மண்ணை இழந்து வருகிறோம். அந்த இழப்பை மழைகாலத்தில் மலைநாட்டிற் குப் போனால் அவதானிக்கலாம். மலையிலிருந்து வழிந்தோடும் நீர் மண்ணை அள்ளிக் கொண்டு பாய்கிறது.

மண்ணரிப்பிற்கு மனிதன் தான் முக்கிய காரணமாகக் இருக்கின்றான். தேயிலைத் தோட்டங்களில் 'சுரண்டியைக் கொண்டு தேயிலையின் பசளையை புல் உண்டுவிடும் என்பதால் ஓர் இதழ் புல்லுப் இல்லாமல் சுரண்டி எடுத்து விடுவார்கள். இதனால், மண் அரிக்கப்படுகிறது. இதேபோல விவசாய நிலங்களில் கொத்தும், உழும் முறைகளும் மண்ணரிப்பிற்கு காரணமாக அமைகின்றன.

மண்ணரிப்பு உள்ள நிலம் பசளைத்தன்மையை படிப்படியாக இழக்கிறது. அத்துடன் பயிர்களுக்குத் தேவையான கனிப் பொருள்களையும் இழக்கின்றன.

பசளையையும் கனிப் பொருள்களையும் இழந்து விடும். நிலத்தால் பயன் இல்லை. அங்கு பயிர்கள் வளர்த்தாலும் அவைகளால் கிடைக்கும் உற்பத்தி வெகு குறைவு.

விவசாயப் பயிர்களுடன் போட்டி போடாத புல்வகைகளை செய்வதன் மூலம் இதன் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்லாம். மலைச்சாரல்களில் வரம்புகள் போல வளர்க்க கூடிய புல்லினங்களை உற்பத்தி செய்வதன் மூலமும் இதனைக் கட்டுப்படுததலாம். நெல் வயல்களின் வரம்புகளிலும் இந்தப் புல்லினங்களைப் பயிரிடலாம்.

இத்தகைய புல்வகைகளில் சவந்தரா என்ற புல்லினம் ஒன்று. இதைப் பயிரிடுமாறு வனவிலாகாவினர் சிபாரிசு செய்கின்றனர். சவந்தரா புல்லைப் பயிரிடுவது இலகு; செலவும்குறைந்தது. சவந்தரா புல்லை எட்டு அங்குலத்திற் கொன்றாக வயலில் அல்லது காணியின் எல்லையில் நட்டால் அவை வளர்ந்து மண் அரிப்பைக்குறைத்து விடும்.

சவந்தரா புல் ஆற்றங்கரைகளில் இப்பொழுது வளர்க்கப்படுகின்றது. சவந்தராவின் வேர் ஒன்பது அடி ஆழத்திற்குச் செல்லக் கூடியது.

சவந்தரா புல் மாட்டுக்கு நல்ல தீனி. அத்துடன் அதன் வேரில் நல்ல வாசனை. எண்ணெய் உண்டு. நிலத்தைத் துளைக்கும் எலிகளுக்கு அந்த வாசனை பிடிக்காது எனவே, நெல்லை வெட்டும் அருழானிலிருந்து பாதுகாப்புக் கொடுக்கிறது சவந்தரா புல்.

வன இலாகாவில் அதைப் பெறலாம். வனவிலாகா அதிகாரி, தபால் பெட்டி 109, வனவிலாகா, கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு எழுதி இந்தப் புல்லைப் பெற்றுக் கொள்ளலாம்.

நன்றி: இலங்கைச் சூழல் காங்கிரஸ்

# மனவலிமை

மனிதனுக்கு உரிய வலிமைகளாகப் பண வலிமை, படை வலிமை, ஆள் வலிமை, உடல் வலிமை, மன வலிமை எனச் சில வலிமைகள் சொல்லப் படும்.

இவற்றுள் முதன்மையானதும், மூலமானதுமாக அமைந்துள்ளது மன வலிமையாகும். மனிதன் இந்தமன வலிமையை அடிப்படையாகக் கொண்டே மற்ற வலிமைகளை அடைகிறான்.

மன வலிமை இல்லாமல்மற்ற வலிமைகளை அடைய முடியாது. மன வலிமை இருந்தால் தான் மற்ற வலிமைகளால் நல்ல பலன்களைப் பெற முடியும்.

மன வலிமை இல்லாமல் மற்ற வலிமைகள் இருந்தும் பயன் இல்லாமல் போய் விடும்.

மன வலிமை என்பது மனதில் உள்ள "உறுதிபபாடு" ஆகும், இதனை 'மன உறுதி' என்றும் 'மனத்திட்பம்' என்றும் சொல்லப்படும்.

ஒருவன் ஒரு காரியத்தை மேற் கொண்டு, அதனை விடாது செய்து முடிப்பதற்கு வேண்டிய. உள்ள உறுதியே மன வலிமையாகும். இதனையே 'மனதில் உறுதி வேண்டும்' எனப் பெரியோர்கள் சொல்லியுள்ளனர்.

இம் மன வலிமை இல்லாதவன் சோம்பேறி ஆவான்.

மன வலிமை உடையவனிடம் பொறுமை குடி கொண்டிருக்கும். இவர்களுடைய மனம் எவ்வளவு வலிமையுடையதாக இருக்கின்றதோ அதே அளவிற்கு இவர்களிடம் பொறுமையும் வலிமையோடு பொருந்தியிருக்கும்.

மன வலிமையுடையவர்கள், தங்களுக்கு வரும் சோதனைகளைத் தாங்கி வெற்றி கொள்வதற்கு, பொறுமையை ஓர் போர் ஆயுதமாகக் கொண்டிருப்பார்கள்.

**★ பணம் இருந்துவிட்டால் உன்னை உனக்கே தெரியாது ★**

ஈரோடு சேஷாயிகாகித ஆலையில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற மகளிர் கலந்துரையாடலின்போது புலவர் கீரன் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்புரை.



# "வரதட்சணை வாங்குவதற்கு எந்தநூலிலும் சான்றுகள் இல்லை"

வரதட்சணை வாங்குவதற்கு எந்த நூலிலும் சான்றுகள் இல்லை. பெண்ணுக்கு கொடுத்தசுகற்குத் தான் சான்றுகள் இருக்கின்றன ஆண்கள் பெண்ணை ஏற்றுக் கொள்வதற்கு பொருள் கேட்டார்கள் என்பதற்கும் எந்த நூலிலும் சான்றுகள் கிடையாது.

இதனை ஒழிக்க முடியவில்லையே என்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

பெண்களைப் பெற்றவர்கள் தங்களுக்கு வரக் கூடிய மாப்பிள்ளை பெரிய படிப்பு படித்தவராக இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். தன் மகள் படிப்பு குறைந்தவளாக இருந்தாலும் மாப்பிள்ளை உயர் படிப்பு படித்தவராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதனால் தான் பிரச்சினையே எழுகிறது.

## வரதட்சணையை ஒழிப்பதற்கு வழி

வரதட்சணை வாங்கவோ, கொடுக்கவோ கூடாது என்று சட்டம் இருக்கிறது. வரதட்சணை என்ற பெயருக்கு பதில் அன்பளிப்பு என்கிறார்கள்.

வரதட்சணையை ஒழிக்க ஒரே வழி எல்லாச் சான்றோர்களும் ஒன்றாகக் கூடி "இந்தப் பெண்ணை திருமணம் செய்து கொள்ளுகிற இந்த வைபவத்தில் மாப்பிள்ளையாகிய நானோ என்பெற்றோர்களோ எந்த வரதட்சணையையும் வாங்கவில்லை என்று இந்த அக்கினிக்கு முன்னால் சத்தியம் செய்கிறேன், சாட்சியம் செய்கிறேன், நான் பொய்ச் சத்தியமோ

**"அன்பு காரணமாக பாசத்தின் காரணமாக எந்த ரூபத்தின் மூலமாகவும் வரதட்சணை கொடுக்கக் கூடாது என்று ஒரு மந்திரத்தை இயற்றி அதன்மூலம் வரதட்சணை வாங்கவில்லை என்று சொல்லக்கூடிய சூழ்நிலையை மணமகனும், பெற்றோர்களும் சொல்லுமாறு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் இதற்கு எல்லோரும் ஆதரவு தரவேண்டும்."**

சாட்சியோ செய்திருந்தால் அது எங்கள் வாழ்க்கையைப் பாதிக்கட்டும்." என்ற மந்திரத்தை புதியதாக உற்பத்தி செய்து திருமணத்தில் மணமகன் சொல்ல வேண்டும் என்ற முறையை ஏற்படுத்தினால் மட்டும் தான் இந்த வரதட்சணையை ஒழிக்க முடியும்.

ஒருவன் எவ்வளவு கொடியவனாக இருந்தாலும் அக்கினிக்கு முன்னால் அமர்ந்து கொண்டு சத்தியம் பண்ணுகிற காலத்தில் சர்வ நிச்சயமாக வெற்றி பெறும். அக்கினிக்கு முன்னால் சத்தியம் செய்து விட்டு வரதட்சணை வாங்கினால் அதன்பின் விளைவுகள் பயங்கரமாக இருக்கும்.

இந்த மந்திரத்தை பெண்களின் பெற்றோர்களும் அக்கினிக்கு முன்வந்து 'நாங்கள் வரதட்சணை கொடுக்கவில்லை' என்று பலரும் அறியும் பொருட்டு சொல்லவேண்டும்.

இப்படியான ஒரு மந்திரத்தை நான் உருவாக்கிக் கொண்டிருக்கிறேன் எந்தளவிற்கு எனக்குப் பெற்றோர்கள் ஆதரவு கொடுக்கிறார்களோ அதை இந்தக்கல்யாண சடங்குகளில் சேர்க்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

அன்பு காரணமாக பாசத்தின் காரணமாக எந்த ரூபத்தின் மூலமாகவும் வரதட்சணையை கொடுக்கக் கூடாது என்று உறுதியாகச் சொல்லக் கூடிய சக்தியை இந்த மந்திரத்தின் மூலமாக சத்தியம் செய்து இதை வாங்கவில்லை என்று சொல்லக் கூடிய சூழ்நிலையை மணமகனும், பெற்றோர்களும் சொல்லுமாறு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு எல்லோரும் ஆதரவு தர வேண்டும்.

## டபிள் கொள்ளை

பெண்ணுக்கு சொத்திலே பங்கு உண்டு என்று தெரிந்து வரதட்சணையும் கேட்டால் அது 'டபிள்' கொள்ளை அடிப்பதற்குச் சமம்.

இந்தச் சட்டம் வரதட்சணையை ஒழிப்பதற்கு மிகவும் பயன்படும். சொத்துக்கள் இல்லாததினால்தான் வரதட்சணை கேட்கிறோம் என்ற வாதம்ஒருகாலத்தில்இருந்தது. அந்த வாதம் செல்லுபடியில்லாமல் போவதற்கு இந்தச் சட்டம் பயன்படுகிறது.

பெண்களுக்குச் சொத்தில் உரிமை கொடுத்திருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன் இதை வரதட்சணை ஒழிப்பதற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டியது நமது கடமை.

## பெண்

இந்த உலகத்தில் பெண்களைப்பற்றி ஏதாவது ஒன்றைச்சொல்லி விட்டால் அதை இந்த உலகம் நம்பி விடும்.

இல்லறம் என்றால் வீடு. இல்லாள் என்றாள் பெண். மனை என்றால் வீடு மனைவி என்றால் பெண்.

ஆண்களுக்கு இ படிக் கிடையாது. ஒரு குடும்பம் நன்றாக இருப்பதும் கெட்டுப் போவதும் ஒரு பெண்ணால் தான்.

## மாமியார்— மருமகள் முரண்பாட்டிற்கு காரணம்

பாசத்தோடும் பண் போடும் வளர்த்த மகனைப் பங்கு போடஒருத்திவந்துவிட்டாளே என்ற ஏக்கமும் தாபமும் தான் மாமியார் மருகள் மீது கொள்ளும் கோபத்திற்கு காரணம்.

உடமைகளைப் பறிகொடுத்தல் என்று சொன்னால் அது இங்குமிகவும் பொருத்தும் இதனால் முதலில் சின்னச்சின்ன விஷயங்களுக்குச்சண்டைவரும் மனைவிக்குப் பரிந்து கொண்டு மகன் அம்மாவை திட்டினால் போச்சு! பெத்தது முதல் வளர்த்து ஆளாக்கிகல்யாணம் செய்து வைத்த நாள் வரையில் செய்தவைகளைச் சொல்லி அழுவாள். இதுதான் சண்டைக்கு அடிப்படைக் காரணம்.

சாமர்த்தியமாக மருமகள் இதனைப் புரிந்து கொண்டு என்ன செய்ய வேண்டும் தெரியுமா? மாமியரைப் புகழவேண்டும் 'அம்மா' என்று கூப்பிடுங்கள் மயங்கியேவிடுவார் இப்படித்தான் அடக்க வேண்டும் நீங்கள் பேசுவது நியாயமாக இருந்தாலும் எதிர்பேச்சு பேசிவிட்டால் போச்சு ..

## பெண்புத்தி பின்புத்தி

பெண்களுக்குத்தான் தெரியும் நம் குடும்பத்திற்கு வேண்டியவர்கள் யார்? யார்? அவர்கள் நம்ம குடும்பத்திற்கு என்னென்ன விசேஷங்களுக்கு என்னென்ன செய்தார்கள் அவர்களுக்கு நாம்என்னென்ன பின்னால் செய்ய வேண்டும்.

குழந்தைகள் பிற்காலத்திற்கும் தேவையானவைகளை எப்படி எப்படியெல்லாம் சேமிக்க வேண்டும் என்பன போன்று ண்முகூட்டியே திட்டம்போட்டு பிற்காலத்திற்கு தேவையானதை செய்வதில் பெண் புத்தியை பின் புத்தி என்கிறோம்.

## நாகரித்தால் பெண்களுக்கு வரக்கூடிய விளைவுகள்

மனக்கிளர்ச்சி எற்பட்டு தவறான வழியில் போகிற நாகரிகம் இன்று நிறைய இருக்கிறது. வருகிறவர்களை வரவேற்று பண்போடு பேசி உபசரிப்பதுபோன்ற பண்பான நாகரிகத்தை தாய்மார்கள் தங்கள் பெண்களுக்குக் கற்றுத்தர வேண்டும் சிறுவயதிலே புடவையைக் கட்டி விடுவது தேவையில்லை. பஞ்சாபி டிரஸ் போட்டு விடுங்கள் அதுதான் உகந்தது பாதுகாப்பானதும் கூட. பத்து வயதுவரையில் குழந்தைகளை மாதர்கள் நன்றாகப் பராமரித்து வளர்க்க வேண்டியது கடமை அதற்குப் பின் நமது கலாசாரம் கெடாமல் பெண்கள் அனாவசியமான விளைவுகளும், தீமைகளும் வராமல் நல்ல நாகரிகப் பெண்மணிகளாக நடை போடுவார்கள்.

தொகுப்பு வனிதன்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் இல்லையா?

கடந்த காலங்களில் நமது நாட்டில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பல இழப்புக்களைச் சந்தித்த எமது மக்களுக்கு இன்று நிவாரணம், உதவி என்று பலர் உதவிகள் வழங்கப்படுவதாகவும், வழங்கப்போவதாகவும் பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த உதவிகள்,நிவாரணங்கள் உண்மையாக பாதிக்கப்பட்டவர்களில் எத்தனை பேருக்கு கிடைக்கின்றன? என்றுபார்த்தால் அதில் கேள்விக்குறி ஏற்படுகிறது.

குடும்பத்தலைவனை இழந்தவர்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபா நிவாரணமாம் ஆனால் அதற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய தஸ்தா வேஜுகளோ ஏராளம்.

கடந்த கால நடவடிக்கைகளின் போது எம்மில் காணாமல் போனவர்கள் எத்தனை பேர், வீதியில் சடலங்களாகி ஒருவருக்கும் தெரியாமல்புதைக்கபட்டவர்கள் எத்தனைபேர் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவர்களுக்கெல்லாம் மரணச்சான்றிதழ்களோ, இறந்ததற்கான சாட்சிகளோ இல்லை. இதனால் இந்த நிவாரணம் இவர்களின் குடும்பங்களுக்கு இல்லை.

வ்வாறுன ஆதாரங்களில்லாவிட்டாலும் படித்தவர்கள், பணம் படைத்தவர்கள் தங்களுக்கிருக்கும் செல்வாக்கினைப் பயன்படுத்தி இத்தகைய நிவாரணங்ளைப் பெறுகிறார்கள். ஆனால் பாமர மக்கள் மிகவறுமையான மக்கள் இதனைப் பெறமுடியாமல் தவிக்கிறார்கள்.

தற்பொழுது வங்கிகளினால் வழங்கப்படடுக் கொண்டிருக்கும் மீளக் குடியமர்த்தல் நிவாரணம் பெறுவதற்கு கூட இத்தகைய மக்கள் படும் துயரம் சொல்லும் தரமன்று.

இவர்களுக்கு கையெழுத்து வைக்கத் தெரியாது, அடையாள அட்டைகள் இல்லை சிலருக்கு அடையாள அட்டையில் ஒரு பெயரும், நிவாரண பத்திரத்தில் இன்னொரு பெயரும் பதியப்பட்டுள்ளது. இதனால் அதிகாலையில் இருந்து கால் கடுக்க நடுவெயிலில் காத்து நின்று விட்டு பணம் கிடைக்காமல் திரும்பிய பலருமுண்டு.

வாழ் நாளிலே ஆயிரம் ரூபா தாளைக் கண்டிராத இந்த மக்கள் இந்த நிவாரணத்தினால் தான் காண்கிறார்கள். அதுவும் கிடைக்க வில்லையென்றால் அவர்கள் மீது அனுதாபப்படாமல் இருக்க முடியாது.

இத்தகைய மக்களை இனம் கண்டு அவர்களுக்கு நிவாரணம்கிடைக்க சகல மட்ட அதிகாரிகளும் கவனமெடுக்க வேண்டும்.

## சுவிஸிலுள்..

( ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக சுவிஸ் நாட்டில் நிதி திரட்டி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த நிலைய உறுப்பினர்களின் முன்மாதிரியை ஏனையவர்களும் பின்பற்றி எமது கிராமங்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் கட்டியெழுப்பவேண்டும் என்று இங்குள்ள பொது மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

★ நல்லவன் லட்சியம் வெல்வது நிச்சயம் ★

அறவழி
NONVIOLENCE

# அமெரிக்காவில் விளையாட்டு போர்க்கருவிகள் அழிப்பு!

அமெரிக்காவில் இருக்கும் லொஸ் ஏஞ்செல் மாநிலத்தில் சிறுவர்களுக்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான பிளாஸ்டிக் விளையாட்டுப் போர்க் கருவிகள் பகிரங்கமாக, உருளை யந்திரத்தினால் அழிக்கப்பட்டன.

சிறுவர்கள் மத்தியில் போர் எண்ணங்களையும், சிந்தனைகளையும் ஏற்படுத்தக் கூடாது என்பதை ஆதாரமாக வைத்துச் செயல்பட்டு வரும் ஒரு ஸ்தாபனம் இதனை நடாத்தியது.

அழிக்கப்பட்ட பிளாஸ்டிக் துண்டுகளைப் பொதியாக்கி, அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், நடைபெற்ற அமெரிக்க விளையாட்டுக் கருவிகள் உற்பத்தியாளர்களின் வருடாந்தக் கூட்டத்தில் பங்கு பற்றியோருக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தனர்.

விளையாட்டுப் போர்க் கருவிகள் உற்பத்தியை பொது மக்கள் விரும்பவில்லை என்பதைக் காட்டும் ஒரு அடையாள நிகழ்வாக இதனைக் கொள்ளலாம் என அமெரிக்கப் பிரஜை ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்து.

அறமுரசு

*ஒரு மனிதனின் தீய பண்புகளை வெறுத்துவிடு,*
*ஆனால் அம்மனிதனை வெறுக்காதே*

— ஷேக்ஸ்பியர்

## அறநோக்கு

### அமைதியும் சகஜநிலையும்

குழம்பிய குட்டையில் மீனைப்பிடிக்க முடியாது—அதபோல அமைதியும் சகஜநிலையும் நிலவாத நாட்டில் சமாதானத்தை எதிர்பார்க்க இயலாது. நாட்டில் சமாதானம் நிலவ வேண்டுமாயின் அங்கே முதற்கட்டமாக அமைதியும் — சகஜநிலையும் அவசியம் தோன்ற வேண்டும்.

பல ஆண்டுகளாக மக்கள் எதிர்பார்த்த அமைதியும் — சகஜநிலையும் இப்போது தமிழ்ப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை என்று வரும் என ஏங்கிய மக்களுக்கு இப்போது பெரிய ஆறுதல் கிடைத்துள்ளது.

கடந்த பதினேழு ஆண்டுகளாக மக்கள் அனுபவித்த அச்சம், பீதி, பதட்டம், இழப்புக்கள் யாவும் நீங்கி புதியதோர் உற்சாகமான காற்று வீச ஆரம்பித்துள்ளது. புதிய சூழ்நிலை உருவாகியுள்ளது. மக்களின் இதயங்களில் நம்பிக்கை ஒளிகள் சுடர் விட ஆரம்பித்துள்ளமையைக் காண முடிகின்றது,

தமிழ் இனத்தைச் சூழ்ந்திருந்த கருகிய மேகக் கூட்டங்கள் மறைந்துவிட்டன. வானில் சிறை பிடிக்கப்பட்டிருந்த, அமைதிப் புறாவுக்கு விடுதலை கிடைத்துள்ளது, 'அமைதிப்புறா' இப்போது சுதந்திரமாகத் தன் வெண் சிறகுகளை உற்சாகம் மேலிட அடித்து வானில் உலாவர ஆரம்பித்துள்ளது.

அமைதிப்புறா வானில் உலா வருகின்ற அற்புதக் காட்சியினை மக்கள் கண்டு களிக்கின்றனர், மக்களிடம் மகிழ்ச்சி. திருப்தி, காணப்படுவதுடன் வாழ்க்கை பற்றிய புதிய நம்பிக்கைகளும் — உற்சாகங்களும் முளை விட ஆரம்பித்துள்ளமையை உணரக் கூடியதாகவிருக்கின்றது,

நாட்டில் அமைதியும் சகஜநிலையும் ஏற்பட்டுவிட்ட மகிழ்ச்சியில் முன்பு ஆரம்பித்து இடையில் விடப்பட்டவைகள்— மீண்டும் தொடரப் படுகின்றன. ஏற்பட்டுவிட்ட அழிவுகளை ஆக்கங்கள் ஆக்கும் முயற்சிகள் துரிதமாகின்றன.

நல்ல விடிவு இனித்தான் தொடங்கப் போகின்றது என மக்கள் உளமார எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வேளையில், இப்போது தோன்றியுள்ள அமைதியும் சகஜநிலையும் நன்கு நீடித்து நிலைக்க வேண்டும்— மக்கள் இன்பமாகவும் - சமாதானமாகவும் வாழும் நிரந்தர நிலை ஏற்படல்வேண்டும் என அனைவரும் விரும்புகிறார்கள்,

அவ்விதமான விருப்பங்களை நிறைவேற்ற யாவரும், ஒன்றுபட்டுச் செயல் படவேண்டிய தருணம் இதுவாகும்.

இனி ஒரு விதி செய்வோம் அதனை இன்றே ஆரம்பிப்போம்.

அமைதியும் — சகஜ நிலையும் எப்போது கிட்டும் என எதிர்பார்த்த மக்களுக்கு அவை இப்போது கிட்டியுள்ளன. அவை மீண்டும் நம்மிடம் இருந்து விலகிப் போக நாம் அனுமதியாமல் இருத்தல், மிக, மிக, அவசியமும் முக்கியமாகும்.

## வட அயர்லாந்தில் அறவழி

வட அயர்லாந்தில் அறவழிக் கொள்கையானது பலவருடங்களாக ஏற்கப்பட்டதாக இருந்து வந்தது. அங்கே வன்முறையை அடிப்படையாகக் கொண்ட பல குழுக்கள் செயல்பட்டு வந்தன.

இதன் பொருட்டு வட அயர்லாந்தில் பல்வேறு வித ரத்தக் களரிகள் ஏற்பட்டன. அதன் மூலம் பல மக்கள் தமது உயிர்களை இழந்ததுடன், உடைமைகளையும் இழந்திருந்தனர்.

ஆனால், அண்மைக்காலத்தில் வட அயர்லாந்தில் அறவழிக் கொள்கையை மக்கள் சிறிது சிறிதாக ஏற்கத் துவங்கியுள்ளனர்.

வட அயர்லாந்தில் இப்போது பக்ஸ் கிறிஸ்ரி தோழமை இணக்க இயக்கம், பீஸ் பீப்பிள் போன்ற அறவழி ஸ்தாபனங்கள் மக்கள் மத்தியில் அறவழிக் கொள்கையைப் பரப்பிப் பணியாற்றி வருகின்றன; என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இராணுவ சேவைக்கு பெல்ஜியமும் எதிர்ப்பு!

ஐரோப்பிய நாடுகளில் இராணுவ சேவையை நீக்கி விடல் வேண்டும் என்று மக்களின் குரல் ஓங்கி வருகின்றது. சுவிற்சலாந்து மக்கள் இதற்கு முன்னோடியாகச் செயல்பட்டு வருகின்றனர்.

இவ் வரிசையில், இப்போது பெல்ஜியம் நாட்டிலும், இராணுவ சேவைக்கு எதிராக மக்கள் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

பெல்ஜியம் நாட்டில் வெளியிடப்படும் "லி சோ" (Le Soir) எனும் பத்திரிகை அண்மையில் நடாத்திய அபிப்பிராய வாக்கெடுப்பின் போது, பெல்ஜியம் இராணுவ சேவையை நீக்கிவிடல் வேண்டும் என 49.6 வீத மக்கள் ஆதரவு காட்டியுள்ளனர்.

பெல்ஜியத்தில் இருக்கின்ற 14.1 வீதமான மக்கள் மட்டுமே இராணுவ சேவை அவசியம் தேவை என்பதைத் தெரிவித்துள்ளனராம்.

இவ் அபிப்பிராய வாக்கெடுப்பில் 67.7 வீதமான மக்கள், கருத்துத் தெரிவிக்கையில், இராணுவ சேவை போருக்காக இல்லாமல், பொதுவான பயிற்சிக்கு மட்டுமே இருத்தல் விரும்பத்தக்கது எனத் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## கிளிநொச்சி மாவட்டச் சாரணர்கள் சைக்கிளில் சமாதான யாத்திரை

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளை மகா வித்தியாலய சாரணர்கள் பன்னிருவர் அப்பாடசாலைச் சாரணாசிரியர் திரு. மா, புவனேந்திரன் தலைமையில் ஏப்ரல் 9 ஆம் திகதி திங்கட்கிழமை தலைநகர் கொழும்பிற்கான தமது சமாதான யாத்திரையை ஆரம்பித்தனர். இவர்கள் துவிச்சக்கர வண்டிகள் வண்டிகள் மூலமே இந்தப் பயணத்தை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது,

இந்த சமாதான யாத்திரையை கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் திரு. க. கோபாலகிருஷ்ணன், உதவி அரசாங்க அதிபர் திரு. கந்தசாமி கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

மாவட்ட ஆணையாளர், வட மாநிலக் கல்விப் பணிப்பாளர், மற்றும் பிரமுகர்களினதும், அறவழிப் போராட்டக்குழு, மற்றும் ஸ்தாபனங்களினதும் சமாதானச் செய்திகளையும் இவர்கள் எடுத்துச் செல்கின்றனர்,

இந்தக் குழுவினருக்கு வழி நெடுக வரவேற்பளிக்கப்பட்டது.

புது வருடத் தினத்தன்று இவர்கள் எடுத்துச் செல்லும் சமாதானச் செய்திகள் ஜனாதிபதி திரு, ஆர், பிரேமதாச அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

### அணு ஆயுத...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

ரிக்கா, மேற்கு ஜெர்மன், நெதர்லாந்து, சுவிற்சலாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், போன்ற நாடுகளில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அதிவேகம் ஆபத்திற்கு அறிகுறி வீதிக்கொலை நிறுத்தப்படுமா ?

அமைதி சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்கள் இன்று புதிய நெருக்கடிக்குள் வாழ்வதற்கு அஞ்சி நடுங்குகிறார்கள்.

காலையில் எழுந்து தினசரி பத்திரிகைகளை விரித்தால் மினிபஸ் விபத்து, மோட்டார் சைக்கிள் விபத்து என விபத்துக்களின் பட்டியல் நீண்டுகொண்டு செல்வதனை அவதானிக்கலாம்.

ஒரு காலத்தில் ஷெல், பொம்மர், ஹெலி தாக்குதலினாலும் துப்பாக்கி, வெடிகுண்டு சம்பவங்களினாலும் பீதியடைந்த எம்மவர் இன்று வீதியிலே உண்டாகும் தாக்குதலுக்கு அஞ்சி வாழவேண்டிய நிலைக்கு தள்ளபபட்டுள்ளனர்.

போக்கு ரத்துத் துறை சன நடமாட்டத்தின் அதிகரிப்பு இதற்கு ஒரு காரணமாகவிருந்தாலும் வாகனங்களை செலுத்துபவர்களும் இந்த விடயத்தில் கவனமெடுத்தால் என்ன?

நான் முந்தி நீ முந்தி என்று அதிவேகமான முறையில் எமது வீதிகளில் வாகனங்கள் பறக்கின்றன.

"அதிவேகம் ஆபத்திற்கு அறிகுறி" என்பதனை வாகனச் சாரதிகள் உணர்ந்து அதற்கேற்றவாறு செயற்பட்டு வீதிக் கொலைகளைத் தவிர்க்க வேண்டும்.

### போரை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கியுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும், கூட, அரசாங்கங்கள் தமது நிலைப்பாட்டில் இருந்து விலகிக் கொண்டுவிடும் என எதர்பார்க்க இயலாது எனவும் அறியப்படுகின்றது.

கருத்தரங்குகள், மாநாடுகள்
சந்திப்புகள், கலந்துரையாடல்கள்
நடாத்துவதற்கு

**காந்தி நினைவு அரங்கம்**
**Gandhi Memorial Hall**

குறைந்த வாடகையில் நிறைந்த சேவை

விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

**அறவழிப் போராட்டக் குழு**
29, கண்டி வீதி,
கைதடி, நுணாவில்,
இலங்கை.

★ வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் ★